செய்தி வெளியீடு எண் :33 நாள் :18.04.2018

***தேனி மாவட்டம்,***
***வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்படும் இளைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பணி ஆணையினை வழங்கவுள்ளார்கள்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

******

தேனி மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞாகள் பயன்பெறும் வகையில், தேனி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் 22.04.2018 அன்று, தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின்முறை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, முத்துத்தேவன்பட்டியில் நடைபெறவுள்ளது.

இத்தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனத்திற்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மேலும், வேலைநாடுநர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்படவுள்ள தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்படவுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிட **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம்** அவர்களும், **மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் நீலோபர் கபில்** அவர்களும் இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும், இந்நிகழ்வில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

எனவே, இச்சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி முதல் பட்டப்படிப்பு தேர்ச்சி, ITI (Industrial Training Institute), பட்டயப்படிப்பு (Diplomo) மற்றும் B.E., பயின்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**